பின்னர் பேரவை முற்பகல் 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11.15

மீண்டும் பேரவை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் கூடியது.

3. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 21-மீன்வளம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுப தங்கவேலன். (குறுக்கீடு)

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைர் அவர்களே, நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்கள் மீனபிடித் தொழிலின் மூலம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கடந்த ஆண்டில் மட்டும் 645 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாக ஈட்டித் தந்திருக்கின்றனர். இந்த அளவுக்கு நமது நாட்டுக்கு, இந்தியத் திருநாட்டுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டுத் தருகின்றவர்கள் நமது மீனவர்கள். கடந்த காலத்தில் மண்ணெண்ணெய் அவர்களுக்கு ரேஷன் மூலம் வழங்கப்பட்டது போல தற்போதும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் மீன்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும்போது இடைத்தரகர்கள் அதிலே தலையிட்டு அதிக அளவில் சம்பாத்தியம் செய்கின்றனர். மீனவர்களுக்கு ஒரு கூட்டுறவு அமைப்பினை ஏற்படுத்தி அவர்களே மீன்களைப் பதப்படுத்தி அந்த லாபத்தினை

அடையக்கூடிய வகையில் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள புன்னக்காயல் என்ற கடற்பகுதியில் ஒரு மணல் திட்டு உள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியாத நிலை இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த மணல் திட்டை அப்புறப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூருக்கும், புன்னக்காயலுக்கும் இடையே ஒரு பாலம்-குறைந்த அளவு மழை பெய்தால்கூட இந்த இரு ஊர்களிலே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புன்னக்காயல் என்ற பகுதி என்னுடைய தொகுதியாகும் என்பது உறுப்பினருக்குத் தெரியும், அது அவர் பகுதியல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதி என்று குறிப்பிடவில்லை. எங்கள் பகுதி என்று தான் குறிப்பிட்டேன். நாங்களெல்லாம் இணைந்திருக்கக்கூடிய மீனவர்கள். ஆகவே, புன்னக்காயலுக்கும், ஆத்தூருக்கும் இடையிலே ஒரு பாலத்தை நீங்கள் உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியதாழை என்ற பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் வழியில் ஒரு பெரிய பாறை இருக்கின்றது. அதனால் வருடத்திற்கு 2, 3 விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் பல மீனவர்கள் இறந்திருப்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே அந்தப் பாறையை அகற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டப்பனை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட பெரிய தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடியிருப்புகளை உடனடியாக நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைக்கென ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடற்கரைச் சாலையில்